**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், மார்கழி திங்கள் 1 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 153/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 320/2020**

1. ஈஸ்வரன்
2. ஈஸ்வரி ..மனுதாரர்கள்/வாதிகள்

3. ராஜ்குமார் ..மனுதாரர்/எதிர்நோக்கும் தரப்பினர்

/எதிர்/

1. பழனிச்சாமி
2. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர்
   திருப்பூர்
3. வட்டாட்சியர், தெற்கு வட்டாட்சியர் அலுவலகம்
   திருப்பூர்
4. கிராம நிர்வாக அலுவலர்,
   நல்லூர்

..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.12.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சூரியப்பிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சுந்தரேசன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.M.கௌதம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

1908 ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

**2.1** அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மனுதாரர்களின் மகன் ராஜ்குமார் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி திருப்பூர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.250/2020 என்ற வழக்கை தாக்கல் செய்தார்.

**2.2** அ.வ.எண்.250/2020 வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் உள்ள மனுதாரர்களின் சுவாதீனத்தை இடையூறு செய்ததால் மனுதாரர்களால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.250/2020 வழக்கில் சமரசமனு தாக்கல் செய்யப்பட்டு 08.12.2020ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. தாவா சொத்தின் உரிமை மூலம் எதிர்நோக்கும் மனுதாரர்களான ராஜ்குமார் பெயரில் உள்ளதால் அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் மற்றும் எதிர்நோக்கும் மனுதாரர்கள் வஞ்சகூட்டு செய்து அ.வ.எண்.250/2020 வழக்கை தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள். மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்யகோரி 1ம் எதிர்மனுதாரரால் அ.வ.எண்250/2020 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் 1ம் எதிர்மனுதாரர் இருந்து வருகிறார். நான்கு ஆண்டுகள் காலதாமதமாக தாக்கல்

செய்யப்பட்டுள்ளதாலும், தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**7. <u>தீர்வு</u> :-**

**7.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிர்நோக்கும் மனுதாரருக்கு தாவா சொத்தின் உரிமை மூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**7.2** 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அ.வ.எண்.250/2020 வழக்கில் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் எவ்வித உரிமை மூலமும் இன்றி மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியம் இல்லாத சொத்தை எதிர்நோக்கும் மனுதாரருக்கு பாகம்பிரித்துள்ளார்கள் என்றும், தாவா சொத்தில் எதிர்நோக்கும் மனுதாரருக்கு உரிமை மூலம் இல்லாததால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**7.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7.4** அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது தாவா சொத்தின் உரிமை மூலம் அ.வ.எண்.250/2020ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மூலம் எதிர்நோக்கும் மனுதாரருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் கூறும் நிலையில், மனுதாரர்கள் மற்றும் எதிர்நோக்கும் மனுதாரர் சேர்ந்து வஞ்சகூட்டு செய்து மேற்படி தீர்ப்பாணையை பெற்றுள்ளதாகவும், அ.வ.எண்.250/2020ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரி 1ம் எதிர்மனுதாரர் அ.வ.எண்.106/2023ஐ தாக்கல் செய்துள்ளதாக 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.5** தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் யார் உள்ளார்கள் என்பதும், அசல் வழக்கில் மனுதாரர்கள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதும் அசல் வழக்கின் தீர்வில் தான் முடிவு செய்ய இயலும். தாவா சொத்தின் உரிமை மூலம் எதிர்நோக்கும் மனுதாரருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அசல் வழக்கின் தீர்விற்கு எதிர்நோக்கும் மனுதாரர் அவசியத்தரப்பினர் என முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, **1** முதல் 4 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையாக தலா ரூ.1000/-ஐ மறு வாய்தா தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க**: 09.01.2026

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.12.16 10:56:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

A SUBASHRI Digitally signed by A SUBASHRI Date: 2025.12.16 10:56:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருப்பூர்.